# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2302/09 - 2022 ඔක්තෝබර් මස 18 වැනි අඟහරුවාදා - 2022.10.18

2302/09 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 18 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி III - காணிகள்

### காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல.: நுவ/3/1/8/கா.எ/180.
காணி அமைச்சின் குறிப்பு இல.: 4-3/4/2018/LO/166.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக் கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட் பிரிவின் பிரகாரம் நான், இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

மத்திய மாகாணத்தில், நுவரெலியா பிரதேச செயலாளர் பிரிவில், திம்புளை கோரளை சிறு பிரிவில், வட்டகொடை தோட்டத்தில் அமைந்துள்ள நில அளவை அதிபரால் தயாரிக்கப்பட்ட நு 3469 இலக்கம் கொண்டதும் 2021.10.15 ஆந் திகதியிடப்பட்ட ஆரம்ப வரைபடத்தில் காட்டப்பட்ட துண்டு இல. 01 இன் மொத்த அளவின் 1.6946 ஹெக்டயார் விஸ்தீரணம் கொண்ட காணித்துண்டின் விபரங்கள்:

**01. துண்டு இல. 01**

காணியின் பெயர்: வட்டகொடை தோட்ட காணி; விபரம்: தோட்டம், 16 நிரந்தரக் கட்டிடங்களும் ஒரு தற்காலிகக் கட்டிடமும்; உரிமை கோருவோர்: காணி சீர்திருத்த ஆணைக்குழு; விஸ்தீரணம்: 1.6946 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2022 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 09 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு நுவரெலியா பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும் படியும், மேலும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்ததற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்ட ஈட்டுத் தொகையையும் அத் தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2022 ஆம்



*இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

ஆண்டு ஒற்றோபர் மாதம் 26 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் முப்பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

ஏ.ஏ. விதுர சம்பத்,
பிரதேச செயலாளர்,
நுவரெலியா.

பிரதேச செயலகம்,
நுவரெலியா,
2022, ஒற்றோபர் 06.

EOG 10 - 0159

---

திருத்தம்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல.: HRP/LND/ACQSN/12/05.
காணி அமைச்சின் இல.: 4-3/9/2014/ஐஆர்/348-ஏ.

இலக்கம் 2081/35 மற்றும் 2018.07.25 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதி விசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட காணி எடுத்தற் சட்டத்தின் 7 ஆம் பிரிவின் கீழ் விளக்கம் 2 ஏ பக்கத்தில் தமில் மொழியில் பதிவிடப்பட்ட விளம்பரத்தில் துண்டு எண் 18 இன் காணியின் அளவு 0.7372 ஹெக்டயார் என்று பதியப்பட்டுள்ள துடன் அதனுடைய அளவு 0.2278 ஹெக்டயார் என சரியானதாக பதியப்பட வேண்டும் என்று நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

எம்.கே.ஜி. மொரவக,
பிரதேச செயலாளர்,
ஹொரவபொதான.

பிரதேச செயலகம்,
ஹொரவபொதான,
2022, ஒற்றோபர் 10.

EOG 10 - 0160